



## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# வனம்

## மானியக் கோரிக்கை எண்.54

# அறிவிப்புகள்
## 2025-2026

## முனைவர் க. பொன்முடி
வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர்

# வனத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வனத்துறையின் சார்பில் 19 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**முனைவர் க.பொன்முடி**
**வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர்**

## தமிழ்நாடு வனத்துறை
## புதிய அறிவிப்புகள் – 2025–2026

### 1. தமிழ்நாடு இருவாச்சி பறவை பாதுகாப்பு திட்டம்

இருவாச்சி பறவைகள் பசுமை மாறா மலைக்காடுகளில் உள்ள பெரிய பூர்வீக மழைக்காட்டு மரங்களில் வாழ்வன. இந்த அரியவகை பறவையினைப் பாதுகாக்க வனங்கள் அரசு நிலங்கள் மற்றும் தனியார் தோட்டங்களிலுள்ள மிகப் பெரிய மரங்களை அடையாளம் கண்டு பாதுகாத்து இம்மரங்களை பாதுகாக்கும் தோட்ட உரிமையாளர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படும்.

இருவாச்சிப் பறவைகள் பாதுகாப்பு மையம் ஒன்று ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அமைக்கப்படும்.

Government of Tamil Nadu will launch a “Hornbill Conservation Initiative” to protect the habitat where they thrive. A centre of excellence for Hornbill Conservation will be setup at the Anamalai Tiger Reserve.

**2. சிங்கவால் குரங்கு, தென்னிந்திய முள்ளெலி, கழுதைப்புலி மற்றும் செந்துடுப்பு காவேரி மீன் பாதுகாப்புத் திட்டம்**

சிங்கவால் குரங்கு, தென்னிந்திய முள்ளெலி, கழுதைப்புலி மற்றும் செந்துடுப்பு காவேரி மீன் ஆகியவை தமிழ்நாட்டில் காணப்படும் அரியவகை உயிரினங்களாகும். இவற்றின் வாழிடத்தைப் பாதுகாக்கவும், ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளவும் **1.00** கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

Endangered Species viz., Lion Tailed Macaque, Madras Hedgehog, Hyenas, and Mahseer fish etc will be conserved by habitat protection, population estimation, community awareness etc., at a cost of Rs.1.00 crore.

### 3. இயற்கை பாதுகாப்பில் முன்னோடி – விருதுகள்

இயற்கை பாதுகாப்பிற்கு மரக்கன்றுகள் நடுதல், மருத்துவத் தாவரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்தல், வனவிலங்குகளைப் பாதுகாத்தல், இயற்கை சார்ந்த விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளில் தன்னார்வத்துடன் ஈடுபடும் நபர்களை அடையாளம் கண்டு அங்கீகரிப்படுவார்கள்.

Towards community led conservation Government of Tamil Nadu will institute Community Conservation Leadership Awards.

**4. இளம் இயற்கை காவலர் திட்டம்**

வனப் பாதுகாப்பு, தீ மேலாண்மை, வன உயிரினங்கள் கணக்கெடுப்பு, வனஉயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் மனித வன உயிரின மோதலை தவிர்ப்பது குறித்து மாணவர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து, இத்திட்டத்தின் மூலம் இளம் **20,000** மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு "**இளம் இயற்கை காவலர்கள்**" என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**இத்திட்டத்திற்கான நிதி 3.00 கோடி ரூபாய் ஆகும்.**

Youth leaders shall be nurtured and trained to become wildlife conservation guardians. A certificate programme will be launched for 20,000 students identified to undergo short term training in forest conservation, forest fire management, wildlife census and human-animal conflict management. The scheme will be implemented at a cost of Rs.3.00 crore.

**5. சென்னை கடற்கரைக்கு கடல்சார் உயரடுக்கு படை உருவாக்கம்**

சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட கடல் பகுதிகளில் ரோந்து செல்வதற்கும், சட்டவிரோத கடல்வாழ் உயிரின வேட்டையைத் தடுப்பதற்கும், கடல்வளப் பாதுகாப்பை திறம்பட மேற்கொள்ளுவதற்கும் ஒரு கடல்சார் உயரடுக்கு படை சென்னையில் உருவாக்கப்படும்.

Government of Tamil Nadu is committed to conservation of its marine resources. To protect its marine bio-diversity, Government will set up a Marine Elite Force for Chennai coast.

**6. வன உயிரின புத்தாக்க வளர்மையங்கள் அமைத்தல்**

அரியவகை வன உயிரினங்களைப் பாதுகாக்க மேலும் ஆறு வனஉயிரின புத்தாக்க வளர்மையங்கள் விருதுநகர், கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், நீலகிரி மற்றும் மேகமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன.

Six new Wildlife Conservation Incubation Centres will be set up at Virudhunagar, Kallakurichi, Ramanathapuram, Nagapattinam, The Nilgiris and Megamalai. These incubation centres would serve as centre for innovation and new ideas for wildlife conservation.

**7. வன உயிரினப் பாதுகாப்பு மேம்பாட்டு அறிவியல் நிறுவனத்தில் இரண்டு புதிய ஆராய்ச்சி மையங்கள் அமைத்தல்**

பாதுகாப்பு மற்றும் பரிணாம மரபியல் மையம் ஒன்றும், உயிர்வகை வாழ்வு மையம் ஒன்றும் சென்னை வண்டலூரில் உள்ள உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனத்தில் (AIWC) புதியதாக **1.50** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

Government will set up two new research centers viz Centre for Conservation and Evolutionary Genetics and Centre for Species Survival at the Advanced Institute of Wildlife Conservation (AIWC) at Vandalur, Chennai at a cost of Rs.1.50 crore.

**8. சேலம் – குரும்பப்பட்டி மற்றும் வேலூர் – அமிர்தி உயிரியல் பூங்கா மேம்பாடு**

சேலத்திலுள்ள குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, வேலூரிலுள்ள அமிர்தி உயிரியல் பூங்காவில் பார்வையாளர்களுக்கான வசதிகள் மற்றும் விலங்குகள் அடைப்புகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் **5.00** கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்**.**

For improvement of zoos at Kurumbapatti Salem District and Amirithi, Vellore District  Rs.5.00 crore will be allocated.

**9. குள்ளநரி பாதுகாப்பு திட்டம்**

சூழல் சமநிலையை உறுதிப்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கும் குள்ளநரிகள் தற்போது அழிவின் விளிம்பில் உள்ளன. எனவே இந்த குள்ளநரிகளை பாதுகாப்பதற்கென குள்ளநரி பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

Conservation of Bengal Fox and Jackal is critical to ensure the ecological balance of habitat. A project will be initiated to conserve these species.

**10. தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நீர்நாய் ஆய்வு மற்றும் பாதுகாப்பு திட்டம்**

நீர்வாழ்வினமான நீர்நாய்கள் சூழல் சமநிலையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அதிகமாக காணப்படும் நீர்நாய்களின் வாழிடங்களை பாதுகாக்கவும், இனப்பெருக்கம் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளவும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை கண்டறியவும் 25.00 இலட்சம் ரூபாய் செலவில் நீர்நாய் ஆய்வு மற்றும் பாதுகாப்பு திட்டம் மேற்கொள்ளப்படும்.

A conservation initiative will be taken up to study the population dynamics, behavioural pattern and habitat improvement of Smooth Coated Otters in Thanjavur and Thiruvarur Districts at a cost of Rs.25.00 lakh with a view to conserve the species.

**11. பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்**

வனம் மற்றும் இயற்கை பாதுகாப்பில் மாணவர்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் வனத்துறையின் மூலம் **1000** இயற்கை முகாம்கள் **2.00** கோடி ரூபாய் செலவில் பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்படும்.

1000 nature camps shall be organised for school students to create awareness about wildlife and nature conservation at cost of Rs.2.00 crore.

**12. கடல் ஆமை ஆய்வில் டெலிமெட்ரி தொழில்நுட்பம் பயன்படுத்துதல்**

ஒவ்வொரு ஆண்டும் தமது இனப்பெருக்க காலத்தில் தமிழ்நாடு கடற்கரைக்கு அதிக எண்ணிக்கையில் கடல் ஆமைகள் வருகின்றன. இவற்றிற்கு ஏற்படும் பல்வேறு அச்சுறுத்தல்களை தவிர்க்கவும் கடல் ஆமைகளின் வாழ்க்கை முறை, அவை அதிக எண்ணிக்கையில் கூடுமிடங்கள் மற்றும் அவற்றின் பருவநிலை இடப்பெயர்ச்சி முறைகளை கண்டறியவும், டெலிமெட்ரி தொழில்நுட்ப ஆய்வுகள் **84.00** இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

Forest Department will undertake its first telemetry study in Tamil Nadu, to identify congregation areas of Olive Ridley Turtles at a cost of Rs.84.00 Lakh.

**13. ஆதிவனம் மேம்பாட்டுத் திட்டம்**

சென்னை, மதுரை, சேலம், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் சுற்றுப்புறங்களில் உள்ள வனங்கள் நகர்மயமாதலால் பெருமளவில் சிதைவுக்குள்ளாகி உள்ளன. இவற்றை மீட்டெடுக்க ஆதிவனம் மேம்பாட்டுத் திட்டம் 2.00 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

To revive degraded forests in the outskirts of Chennai, Madurai, Salem, Trichy and Coimbatore, ‘Aadhivanam Membattu Thittam’ will be implemented at a cost of Rs.2.00 crore.

**14. பழங்குடியினர் – பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மாணவர்களுக்காக வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் தங்குமிடம், வகுப்பறை மற்றும் சுகாதாரமான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் 8.00 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

Basic amenities in the tribal schools run by the Forest Department shall be upgraded at a cost of Rs.8.00 crore.

**15. மனித – வன உயிரின மோதலை தவிர்க்க எஃகு கம்பி வேலி அமைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள காவேரி வடக்கு வன உயிரினச் சரணாலய எல்லைப் பகுதியில் மனித – வன உயிரின மோதலை தவிர்க்க எஃகு கம்பி வேலி **31.00** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

In order to mitigate human - wildlife conflict especially with elephants, Government has planned to install steel rope fence in Cauvery North Wildlife Sanctuary areas at a cost of Rs.31.00 crore.

**16. சந்தனமரம் மற்றும் ஈட்டிமரம் சாகுபடி மற்றும் வளர்ப்பை ஊக்குவித்தல்**

சந்தன மரம் மற்றும் ஈட்டி மரங்கள் பாதுகாக்கப்பட்ட அதிக மதிப்புள்ள மரங்களாகும். இவற்றை பொதுமக்கள் வளர்ப்பதை ஊக்குவிக்கவும், வளர்த்த மரங்களை அறுவடை செய்வதையும், விற்பனை செய்யும் நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை எளிமைப்படுத்துதல்.

Government will take steps for simplification of procedures and guidelines to promote cultivation and sale of Sandalwood and Rosewood.

**17. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பசுமை பரப்பை மதிப்பீடு செய்தல்**

தமிழ்நாட்டில், மாநகரங்களின் நகரமைப்பு பெருந்திட்ட உருவாக்கத்தில் அத்தியாவசியமான மரங்கள் கணக்கெடுப்பு மற்றும் பசுமைப் பரப்பு குறித்த ஆய்வுகள், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய ஆறு மாநகரங்களில் மேற்கொள்ளப்படும்.

Forest Department will undertake tree census and assessment of green spaces in six major cities viz., Chennai, Coimbatore, Madurai, Trichy, Tiruppur and Salem.

**18. திண்டுக்கல் மாவட்டத்தில் யானைகள் நடமாட்டத்தை கண்காணிக்க சிறப்பு அதிவிரைவுப்படை**

திண்டுக்கல் மாவட்டத்தில் யானைகளால் விவசாயிகள் பாதிப்படையாத வகையில் யானைகளின் நடமாட்டத்தை உடனுக்குடன் கண்காணித்து கட்டுப்படுத்த 20 நபர்களைக் கொண்ட ஒரு சிறப்பு அதிவிரைவுப்படை 1.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

Government will set up a Rapid Response Team with 20 members for Dindigul District to mitigate human-elephant conflict at a cost of Rs.1.00 crore.

**19. திண்டுக்கல் மாவட்டத்தில் வன எல்லைகளில் தொங்கும் சூரிய மின்வேலி அமைத்தல்**

திண்டுக்கல் மாவட்டத்தில் கன்னிவாடி சரகத்தில் வன விலங்குகளால் விவசாய நிலங்களில் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு வன எல்லைகளில் **1.60** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **20** கிலோ மீட்டர் நீளத்திற்கு தொங்கும் சூரிய மின்வேலி அமைக்கப்படும்.

Forest Department will undertake installation of 20 km hanging solar fence in Kannivadi Range, Dindigul District at a cost of Rs.1.60 crore, to protect Agricultural lands from damages due to wildlife conflict.

குறிப்பு

# குறிப்பு